தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984 மார்ச் 29 வியாழக்கிழமை.

பங்குனி 16, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

அழிவு இல்லாததாய், பகைவருடைய வஞ்சனைக்கு இரையாகாததாய், தொன்றுதொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

காட்டுமன்னார்குடி வட்டத்தில் வாழும் நரிக்குறவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை.

390—(*வினா எண். 18875) திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி வட்டம் வீரானூர் எல்லையில் வீடுகட்டி வாழும் நரிக்குறவர்கள் மேற்படி இடத்தை தங்களுக்குப் பட்டா வழங்கக் கோரி அரசுக்குச் கோரிக்கை அனுப்பினார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தென்னார்க்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி கோயில் வருவாய் வட்டத்தில் 14 நரிக்குறவர் குடும்பங்கள் குடியிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் குடியிருக்கும் இடம் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானது. பொதுப்பணித்துறையின் மூலமாக, அந்த நிலத்தை, அவர்களுடைய அனுமதியைப் பெற்று அதற்குப் பிறகு நரிக்குறவர்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, நரிக்குறவர்களைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தாலும் அவர்கள் இருக்கக்கூடிய ஜாதியைப் பொறுத்த வரையிலே மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். ஆக்வே அவர்களை ஷெட்யூல்ட் ட்ரைபிலே சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட உபரி நிலம்.

391—(*வினா எண் 21490) **திரு. இ. கணேசன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் அரசு எடுத்த உபரி நிலம் எத்தனை ஏக்கர் ?

(ஆ) அவைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) சேலம் மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலம் 614 ஏக்கர்.

(ஆ) மேற்படி உபரி நிலத்தில் ஆதிதிராவிடர்கள் 16 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன? மீதியுள்ள நிலங்களை இன்னும் பிரித்துக் கொடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக நிலங்களை எடுக்கின்றபோது அந்த நிலங்களை இதற்கு முன்னால் குத்தகைதாரர்கள் பயன்படுத்திக் கொண்டிருந்தால் அந்தக் குத்தகைதாரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு ஆதி திராவிட மக்கள், அதிலே நேரடியாக விவசாயம் செய்கின்ற ஆதி திராவிட மக்கள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு முப்படையைச் சேர்ந்த பணியாளர்கள், முப்படைகளில் வேலை செய்கின்றபோது இறந்தவர்கள், அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களின் குடும்பத்தினர் ஆகியோருக்குக் கொடுக்கப்படுகின்றது.